உ
சிவமயம்



இது
யாழ்ப்பாணம் வடமராட்சி
வடதுன்னையம்பதியைச் சார்ந்த
மேழிக்கொடி உயர்ந்த
சைவ வேளாண்குல திலகரும்
கந்தர் உடையார் வழித்தோன்றலும்

உயர் திரு வல்லிபுரநாதர் மயில்வாகனம்
அவர்களின் புத்திரனுமாகிய

# திரு. சிவவினாயகம் (சுந்தரம்) அவர்களின்

அமரத்துவமடைந்தமை குறித்த

# நினைவு



13-08-94

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. மயில்வாகனம் சிவவினாயகம்



தோற்றம்: 13-09-1913 மறைவு: 14-07-1994

## திதி நிர்ணய வெண்பா

பல ஆண்டு ஆனி உத்தரதிருநாளாம் வியாழனதில்
பகல் சாய்கின்ற வேளை பூர்பபக்க சப்த்தமி திதியில்
சுற்றம் பண்ணிசைக்க காலன் உயிர்செண்டேக
சுந்தரம் சிவபதம் வேண்டி வேதனடி தானடைந்த நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் வணக்கம்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருமைக்கும் பீடும்பெருக்கும் — உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை

## தேவாரம்

அச்சம்இலர் பாவம்இலர் கேடும்இலர் அடியார்
நிச்சம்முறு நோயும்மிலர் தாமுந்நின்றி யூரில்
நச்சம்மிட றுடையார் நறுங் கொன்றைநயந் தாளும்
பச்சம்முடை அடிகள் திருப்பாதம் பணி வாரே

## திருவாசகம்

காலம் உண்டாகவே காதல் செய்து உய்மின்: கருதரிய
ஞாலம் உண்டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலம் உண்டான் எங்கள் பாண்டிப்பிரான் தன் அடியவர்க்கு
மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்துமுந்துமினே!

## திருவிசைப்பா

எப்பந்த வல்வினைநோய் தீர்த்திட்டு எமையாளும்
சம்பந்தன் காழியர்கோன் தன்னையுமாட் கொண்டருளி
அம்புந்து கண்ணாளும் தானும் அணிதில்லைச்
செம்பொன்செய் அம்பலமே சேர்ந்திருக்கை யாயிற்றே

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற்றேன் பெற்றதார் பெருவாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியபுராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்று
மறவாமை வேண்டுமின்னும் வேண்டு நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ யாடும் போதுன் னடியின்கீழ் இருக்க வென்றார்

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

## அன்னார் தம் குலதெய்வங்கள் மீது துதி
## வெல்லிக்கம் தோட்டம் விநாயகர்

தீதறியான் நின் தரிசனம் காணத் தினம் வருவான்
பூண்ட விரதம் புனிதமாய் நோன்றிடும் புண்ணியத்தான்
மாண்டு மறைந்து மலர்ப்பாதம் சேர்ந்திட நண்ணினனே
ஆண்டருள் வாய் வெல்லிகம் தோட்டம் வாழும் விநாயகனே!

## வல்லியானந்தப் பிள்ளையார்

ஆண்டுதோ றாற்றும் அழகுத் திருவிழா விற்கலந்து
பாடியும் நின்னடி யாரொடு கூடியும் நாண்மலர்
தேடியும் நின்வாசல் தினம் தினம் வந்து நிற்பான்
நாடிடும் சுற்றத்திற்கு நல்லரின் பாதத் தன்னைக்
கூடிட அவர்க்கருள் வல்லியானந்தப் பிள்ளையாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டு அம்மன்

துன்னையிலே கோவில்கொண்ட தேவி அம்மாதாயே
துணையிருந்து எமை காத்தருள்வாய் துர்க்காதேவி
வெள்ளை யுள்ளம் படைத்தவளே வேதவல்லி
வேண்டும் வரம் எமக்கு ஈந்தாய் வீட்டு அம்மாளே

## ஞான வயிரவர்

பொங்கி வடைசுட்டு பொலிவுடன் உந்தனுக்கு படைத்திடவே
நெருங்கி வரும் துன்பங்களை நேரில்நின்று காப்பாற்றும் ஞானப்பா
பக்திக்கொரு விருந்தாக பறைமுழக்கம் சாற்றிடுவேன்
பக்தனாயிருக்கும் எமை பக்குமாய் காத்தருளே

## மிந்திரன் அம்மன்

தங்கச் சிலம்பு காலில் சலசல வென்றிடச்
தாண்டவமாடி அன்பர்கள் குறைதீர்க்கும் அன்னையே
மாரியம்மா! மக்களில்லா குறை தீர்த்தாயன்று
மனமுருகி நிற்கும் சுந்தரனை காத்தருள்வாரியம்மா

## சந்நிதி முருகன்

ஆடும் மயிலேறி அடியார்குறைதீர்க்கும் சந்நிதி வேலே
ஆண்டு தோறும் பூண்டவிரதமதில் புண்ணியங்கள் சேர்ந்திடவே
வெள்ளி தினம் உன் வாசல் வீதி வலம் வந்திடுவேன்
வேங்கை மரமானவனே எந்தனுயிர் காத்தருள்வாய்

## வல்லிபுர ஆழ்வார்

மணற் பரப்பில் கோவில் கொண்ட மாதவனே கோவிந்தா
மாதர் குல மாணிக்கமே மார்பழகா மணிவண்ணா
இடையர் தொழில் செய்திடவே எமை காத்துநின்றாய்
இன்னல் தீர்க்கும் திருமாலே அன்புனுயிர் காத்திடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அமரர் உயர்திரு
### மயில்வாகனம் சிவவினாயகம்
அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

சீர்வளம் சிறந்தது ஏர்வளம் கொண்டது கார் வளம் கண்டு களனிகள் விளைவது போர்வளம் கொண்டு புனிதமாய் திகழ்வது தமிழீழமென்னும் புண்ணியபூமி நம் தமிழீழத்தின் தலையாய் விளங்கும் யாழ்ப்பாணத்தின் வடமராட்சி யென புகழ்பெற்ற வடதுன்னையம்பதியில் கோயில்களும், குடிகளும் நெருக்கமாய் அமைந்துள்ள வெல்லிக்கம் தோட்டமெனும் சிறுகிராமத்தில் மகிழ்வுறவே வாழ்ந்து வந்த உயர்திரு மயில்வாகனம் சேதுப்பிள்ளை தம்பதியினரின் கனிஸ்ட புதல்வனாகப் பிறந்தவர்தான் அமரர் சிவவினாயகம் அவர்களாவர்.

அமரர் அவர்கள் இளமையில் மிகுந்த அறிவும், அழகும் ஆற்றலும் நிரம்பியவராக காணப்பட்டார். தனது கல்வி அறிவை துன்னாலை மிசன் கலவன் பாடசாலையில் பெற்றுக் கொண்டார். மணமுடிக்கும் இளவயதை அடைந்த போது உயர்திரு. சிதம்பரப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகள் பசுபதியை விருப்போடு மணமுடித்து வாழ்ந்து வந்தார். இவ்வாழ்க்கையில் அவர் பெறவேண்டிய அனைத்தையும் பெற்று நிறைகுடமாகவே வாழ்ந்து வந்தார். அக்காலத்தில் மிகுந்த சமயப்பற்றுடையவராகி பிள்ளையார் ஆலயத்தில் மிகுந்த தொண்டாற்றி வந்தார். சமய தொண்டாற்ற முற்பட்டபோது பெரும் துயரங்களைச் சந்திக்க நேர்ந்தும் சலிக்காது அப்பணிகளை செவ்வனே நிறைவேற்றினார். அத்தோடு மட்டுமன்றி சமுதாயப் பணியிலும் முழுமனத்தோடு தன்னை ஈடுபடுத்தி எத்தனையோ திருமணங்களைச் செய்து வைத்தார். மரணச்சடங்குகளை முன்னின்று நடத்துவதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலிக்காமல் ஈடுபட்டார். மக்கள் மனதில் அவர் இடம்பிடித்திருந்த தன்மையும், சன்னதி சித்திரத்தேர் சில்பூட்டு வைபவத்திலும், வல்லிபுரகுகோவில் இராஜகோபுர அடிக்கல் நாட்டு வைபவத்திலும் பங்குகொள்ள கிடைத்த கிருயையும் அவர் மேற்கொண்ட சமய சமூகம் பணிகளுக்கோர் நல்ல உதாரணமாகும். தான் பெற்ற பிள்ளைகள் நலமுடன் வாழ நல்ல வழிகாட்டியும், வாழ்வும் அமைத்து கொடுத்தார். பிள்ளையாரிடம் நாளாந்தம் திரண்டு வருகின்ற அடியார்கள் சிலர் அவர் பணியை தொடர இவர் தனியிடத்தே தெய்வசிந்தனையோடுவளமான வாழ்வைப் பெற்று வாழ்கின்ற இறுதிக் காலத்தில் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டு இருந்தார். கணபதியின் அருளோடு ஆனி உத்திர திருநாளில் பிறந்த நட்சத்திரத்தில் பூர்பக்க சப்தமிதிதியில் தன்னை அன்போடு நேசித்த அனைவரையும் விட்டு மேலான பேரின்பமுடைய சிவபதம்எய்தினார்.

* * *

## மக்கள் புலம்பல்

அருந்தவத்தாற் பெற்றெடுத்த மக்கள் என்று
அற்புதமாய் கோவிலெல்லாம் வணங்கி நிற்பாய்
துயரமதனைக்காட்டாமல் உன்பணியை செய்திடவே
துணிவுடனே நாங்கள் நின்றோம் அப்பா
தனியிடத்தே வளமாக வாழும் நாளில்
தன்னிகரில்லா கூற்றன் செய்த சதியோ அப்பா
கணபதி உனைப் பிரித்தானோ கதறியழ வைத்தானோ
கலங்குகின்றோம் வெதும்புகின்றோம் என் செய்வோமே

## பேறாமக்கள் புலம்பல்

குஞ்சையா உங்கள் பெருமையினை நாமறிந்து
மனங்குளிர்ந்து நீங்கள்தரும் உணவுகளை உட்கொள்வோம்
தஞ்சமாய் இனிநமக்கு யாருமில்லை தரணி தனில்
தவிக்கின்றோம் தற்பரனே எம் துயரைப் போக்கிவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் புலம்பல்

நல்லதொரு சிறப்பான மாமாவை நாமிழக்கப்
பொல்லாத பழியென்ன புரிந்தோமோ இவ்வுலகில்
அல்லும் பகலுமெம்மை விசாரித்த சுகத்தையினிச்
சொல்லி அழுவதற்கோ சொல்லாமல் சென்றாய் நீ!

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

நலன் பேணும் கைங்கரியம் முழுதுஞ் செய்து
நற்பெற்றோ ருடன்நாமும் நயமாய் வாழ
நிலந்தனிலே எமைவிட்ட அன்புத் தாத்தா
நீர் மறைந்த விந்தைதனை நினைந்தேங்குகின்றோம்

## பீட்டப்பிள்ளைகள் புலம்பல்

முத்தமிட்டு எமைத் தோளில் நாளும் சுமந்து சென்று
கண்துயில வைக்கும் கண்மணியாம் பீட்டப்பாவே
எதற்கு இங்கு வந்தான் இயமன் இவ்வேளை
பித்துப் பிடித்தோ பெரும்பிழை செய்து விட்டான்

## உற்றார் உறவினர்கள் புலம்பல்

எல்லாரும் இசைந்திட இவ்வாழ்வில் நனிசிறந்து ஏற்றமுற்று
பொல்லாங்கு வெர்க்குமே இழைக்காத தனித்துவப் புறாட்னாக
வல்லவன் இறைவன் வாழ்ந்திட மனிதனாய் வாழ்ந்தவுந்தன்
நல்லதோர் இலட்சியப்யோக்கினை நினைந்து நாம் நலிகின்றோமே

## தேற்றம்

பிறந்தபின் இறவாதுலகினில் வாழ்ந்தவர் எவரும் இல்லை
சிறந்தவர் அறவழிநின்றவர் அரன்பணி அன்புடன் செய்தோர்
இறந்து பின் பிறவாப் பெருநெறி எய்துவர் என்பது துணிவால்
மறைந்தவர் பெருமை நினைந்தவர் பிரிவால் வருந்துதல் தவிர்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவளி

*சந்திரவர்- தாமர், முத்தர், கதிரேசர், சின்னத்தம்பியார்*
*பிள்ளைகள்) வல்லிபுரநாதர்*

*ஆறுமுகம் - வேதாரணியர்*
*(மந்திகைவெள்)*

*துன்னாலை முத்தர் — நாச்சிப்பிள்ளை*

**தம்பதியர் வேதாரணியர் - நாச்சிப்பிள்ளை**
*பிள்ளைகள்:- கணபதிப்பிள்ளை, சுப்பிரமணியம், மீனாட்சி*
சேதுப்பிள்ளை, சிதம்பரப்பிள்ளை

*வல்லியார்:- தெய்வானை, ~~முருகேசர்~~*
*பிள்ளைகள் ~~சந்திரவர் இலட்சுமியார்~~*

**தம்பதியர் வல்லிபுரநாதர் - தெய்வானைப்பிள்ளை**
*பிள்ளைகள் ~~இல்லை~~* முருகேசர், சந்திரவர், இலட்சுமியார்,
*ஆளியார் - சின்னத்தை*
***பிள்ளை***

**தம்பதியர் வல்லிபுரநாதர் - சின்னத்தை**
*பிள்ளைகள்:- மயில்வாகனம், சிலம்பர், சின்னையா பாறாத்தை*
*வள்ளியார், சவுந்தரிப்பிள்ளை*

**தம்பதியர் மயில்வாகனம் – சேதுப்பிள்ளை**
*பிள்ளைகள்:- கணபதிப்பிள் சிவவினாயகம்*

**தம்பதியர் சிதம்பரப்பிள்ளை— சவுந்தரிப்பிள்ளை**
*பிள்ளைகள்:- அழகம்மா, சிவக்கொழுந்து, பசுபதி, சுப்பிரமணியம்*

**தம்பதியர் சிவவினாயகம்—பசுபதி**
*பிள்ளைகள்:- சேதி, மனோன், இராசமணி, தெய்வேந்திரம்*
*நாகேந்திரம்; முருகமூர்த்தி, சேதுப்பிள்ளை*

**தம்பதியர் சிவலிங்கம் — இராசமணி**
*பேரப்பிள்ளைகள்:- சிவராசா, சிவமணி*

**த. தெய்வேந்திரம் — அரியநாயகி**
*பேரப்பிள்ளைகள்:- சுமித்தா, சுசி' சுகுணா, கஜன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த. நாகேத்திரம் — இராசேஸ்வரி
பேரப்பிள்ளைகள்:- வினோதன், ராதிக்கா

த. மூருகமூர்த்தி — கயிலநாயகி
பேரப்பிள்ளைகள்:- ரகுபதன், துளசிஹரன்

த. நடராசா — சேதுப்பிள்ளை
பேரப்பிள்ளைகள்;- உருத்திரன், ரூபன், ராணி, றஞ்சி

த. சிவராசா — அருள்ராணி
பீட்டப்பிள்ளைகள்:- தமிழினி, பிரியா, தனபாலன்

த, சூரியகுமார் — சிவமணி
பீட்டப்பிள்ளை:- சர்மிளா

மகன் இராசசிங்கம். த. இராசசிங்கம்— சிவக்கொழுந்து
பேரப்பிள்ளைகள்:- பி. வளர்மதி, திகழ் த. வளர்மதி—இராசன்
(பீட்டப்பிள்ளைகள்:- பி. சசிகலா) இராஜபல்லவன், ஜிம்மன்
த. இராஜபல்லவன் — ராணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

அன்புடையீர் :-

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காம்
மயில்வாகனம் சிவவினாயகம் என்ப
வர் அமரராகிவிட்டார் என்ற செய்தி
கேட்டு அழுது புலம்பித் துடித்து
நின்ற அனைவருக்கும் அவ
ரது கிரியைகளில் பங்குபற்
றிய யாவருக்கும் அஞ்சல்
மூலம் அனுதாபங்கள்
தெரிவித்து அன்பர்
கட்கும். மற்றும்
உதவிகள் புரிந்
தோருக்கும்
எங்கள்
நன்றியும் வணக்கமும்
உரித்தாகுக.

கொடிக்காடு
துன்னாலை,
கரவட்டி

இங்ஙனம்
அன்புள்ள
பிள்ளைகள்

சுதா அச்சகம் கல்வியங்காடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org